பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**17 02 2026 TUESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா — பிரான்ஸ் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி, அந்நாட்டு அதிபர் திரு இமானுவெல் மெக்ரானுடன் மும்பையில் பேச்சு நடத்தினார்.
2. இந்தியா மேற்கொண்டுள்ள வர்த்தக ஒப்பந்தங்கள் உலக நாடுகள் உடனான ஒத்துழைப்பை வலுப்படுத்தியிருப்பதாக மத்திய அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
3. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் நாட்டின் ஐந்தாவது தொழில் புரட்சி என்று மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.
4. பங்களாதேஷின் புதிய பிரதமராக திரு தாரிக் ரஹ்மான் இன்று பதவியேற்றார்.
5. புதுதில்லி சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

இந்தியா — பிரான்ஸ் இடையே இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பிரான்ஸ் அதிபர் திரு இமானுவெல் மெக்ரானுடன் பேச்சு நடத்தினார்.

மும்பை லோக் பவனில் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையில் பாதுகாப்பு, வர்த்தகம், கலாச்சார பரிமாற்றம் உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து இரு தலைவர்களும் பேச்சு நடத்தினர்.

பின்னர், இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது பேசிய பிரதமர் திரு நரேந்திர மோடி, இந்தியா — பிரான்ஸ் புதுமை கண்டுபிடிப்பு மற்றும் கலாச்சார ஆண்டாக அறிவித்துள்ளதையடுத்து, இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பும், மக்களுக்கு இடையிலான தொடர்புகளும் வலுப்பெறும் என்று தெரிவித்தார்.

முன்னதாக, பிரான்ஸ் அதிபர் திரு இமானுவெல் மெக்ரான், மும்பை தாஜ் நட்சத்திர விடுதியில் தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

அப்போது பேசிய அவர், தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் போராட்டத்திற்கு பிரான்ஸ் துணை நிற்கும் என்று உறுதிபட தெரிவித்தார்.

இந்த துயர சம்பவத்தில் தங்கள் உறவுகளை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு தமது ஆறுதலை தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

திரைப்படத்துறையினரை சந்தித்த திரு மெக்ரான், இந்தியா — பிரான்ஸ் இடையிலான கலாச்சார பண்பாட்டுத் தொடர்பை எடுத்துரைத்தார்.

<<<<<>>>>>>

பாதுகாப்புத்துறையின் **H-125** ஏர் பஸ் ஹெலிகாப்டர் திட்டத்திற்கான முதலீடு ஆயிரம் கோடி ரூபாய்க்கும் கூடுதலாக இருக்கும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

கர்நாடகா மாநிலம் **Vemagal-**லில் இந்தியா வந்துள்ள பிரான்ஸ் பாதுகாப்புத்துறை அமைச்சர் திருமதி கேத்தரின் **Vautril** -வுடன் **H-125** ஏர் பஸ் ஹெலிகாப்டர் அணிவகுப்பை பார்வையிட்டார்.

விமானப்படை தலைமை தளபதி ஏர்ஷீப் மார்ஷல் ஏ பி சிங்கும் உடனிருந்தார்.

**H-125** ஏர் பஸ் ஹெலிகாப்டர் திட்டம் ஏராளமான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் என்றும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியனுடன் இந்தியா செய்துகொண்ட வர்த்தக ஒப்பந்தங்கள் நாட்டின் பொருளாதார நம்பிக்கையை வலுப்படுத்தியிருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மும்பையில் இன்று நடைபெற்ற உலக பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டில் உரையாற்றிய அவர், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்கள், இந்தியாவுடன் இணைந்து செயல்படும் நாடுகள் உடனான ஒத்துழைப்பை வலுப்படுத்தியிருப்பதாகவும் தெரிவித்தார்.

உலக நாடுகள் உற்பத்தி, நிதி, ஏற்றுமதி கட்டுப்பாடுகள் போன்றவற்றை பொருளாதார ஆயுதமாக பயன்படுத்தி வரும் சூழ்நிலையில், இந்தியாவின் அணுகுமுறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் அவசியமாகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும், அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்புக்கும் இடையிலான தொலைபேசி உரையாடலுக்கு பின்னர் அமெரிக்கா, இந்தியாவுக்கு விதித்திருந்த **50** சதவீத வரியை **18** சதவீதமாக குறைத்தது என்றும் அவர் தெரிவித்தார்.

ஐரோப்பிய யூனியனுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், பேச்சுவார்த்தைகளுக்குப்பின் நிறைவேற்றப்படும் என்றும் திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

ஆற்றல் மிகு விவசாயிகளை உருவாக்கும் நோக்கில், **Bharat VISTAAR** என்ற மின்னணு தகவல் தளத்தை மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தொடங்கி வைத்தார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் இதனை தொடங்கிவைத்து பேசிய அமைச்சர், அறிவியல் தொழில்நுட்ப ரீதியாக விவசாயிகளின் திறனை மேம்படுத்தி அவர்களுக்கான அதிகாரத்தை உறுதி செய்யும் நோக்கில் இந்த தகவல் தளம் தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

விவசாயம் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் செல்போன் மூலமாக தொடர்புகொண்டு விவசாயிகள் உடனுக்குடன் பெறலாம் என்றும் அவர் கூறினார்.

சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் அறிவியல் பூர்வமான ஆலோசனைகள், வேளாண் விளைப்பொருட்களின் அன்றாட விலை நிலவரம், வானிலை மாற்றம் உள்ளிட்ட தகவல்களை விவசாயிகள் அறிந்து பயன் பெறலாம்.

டிஜிட்டல் இந்தியா கட்டமைப்பை கிராமங்களுக்கும் எடுத்துச் சென்று, வேளாண் துறையில் மாபெரும் மின்னணு புரட்சியை இந்த தகவல் தளம் ஏற்படுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

விவசாயிகளின் வருவாயை பெருக்கவும், விவசாயம் தொடர்பான தகவல்களை தெரிந்துகொள்ளவும், கால்நடை பராமரிப்பு உள்ளிட்ட தொழில்நுட்பங்களை தெரிந்துகொள்வதற்கும் இது உதவிடும் என்று திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், ராஜஸ்தான் முதலமைச்சர் திரு பஜன்லால் சர்மா பேசுகையில், விவசாய தொழிலுக்கு புதிதாக வந்துள்ளவர்களுக்கு இது மிகவும் உதவிகரமாக இருக்கும் என்றும், இதனை முழுமையாக பயன்படுத்தி, தங்களது விவசாயத்தை பெருக்கிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று மாலை ஆந்திரப்பிரதேச மாநிலத்தின் விசாகப்பட்டினம் வந்து சேர்ந்தார்.

குடியரசுத் தலைவரை ஆந்திரப்பிரதேச ஆளுநர் திரு அப்துல் நசீர், துணை முதலமைச்சர் திரு பவன் கல்யாண் மற்றும் உயரதிகாரிகள் வரவேற்றனர்.

விசாகப்பட்டினத்தில் நாளை சர்வதேச கடற்படை ஆய்வை குடியரசுத் தலைவர் மேற்பார்வையிடுகிறார்.

நாட்டின் கடற்படையின் வலிமையையும், கடல்சார் திறனையும் உலகிற்கு உணர்த்தும் வகையில், இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது.

<<<<<>>>>>>

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் நாட்டின் ஐந்தாவது தொழில் புரட்சி என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சி மாநாட்டின் இரண்டாவது நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களின்

பல்வேறு பெரிய பிரச்சினைகளுக்கு தீர்வு அளிக்கும் தளமாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அமைந்துள்ளதாக கூறினார்.

இளைஞர்கள் இடையே ஒரு புதிய சக்தியை இது கொண்டுவந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சமுதாயத்தையும், பொருளாதாரத்தையும் ஒட்டுமொத்தமாக உயர்த்துவதற்கு இது பயன்படும் என்று அவர் கூறினார்.

இந்த உச்சிமாநாட்டையடுத்து, வரும் இரண்டாண்டுகளில் 200 பில்லியன் டாலர் அளவுக்கு முதலீடுகள் பெருகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திற்கு நாட்டு மக்களிடையே பெரும் வரவேற்பு உள்ளதாக அவர் கூறினார்.

இந்த தொழில்நுட்பத்தை சமூக பொறுப்புடன் உலக நாடுகள் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவதற்கான கருத்தொற்றுமையை இந்தியா ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு கட்டமைப்பை உருவாக்குவதில் அனுபவ ரீதியான பிரச்சினைகள் உள்ளதாக அவர் கூறினார்.

இப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாண தொழில்நுட்பம் சார்ந்த சட்ட ரீதியான அணுகுமுறையை பின்பற்ற வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை முறைப்படுத்துவதற்கான சட்டங்கள் வகுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் திரு அஷ்வினி வைஷ்ணவ் வலியுறுத்தினார்.

<<<<<>>>>>>

தேசிய நெடுஞ்சாலைகளையொட்டி பூ மரங்களை வளர்க்கும் தேனீக்கள் வழித்தடத் திட்டத்தை தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் அறிவித்துள்ளது.

தேசிய நெடுஞ்சாலைகளின் அழகையும், சுற்றுச்சூழலையும் பாதுகாக்கும் நோக்கில், சாலையோரங்களில் பூ மரங்கள் இத்திட்டத்தின்கீழ், வளர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆணையத்தின் இந்த புதிய முயற்சிக்கு மத்திய சாலை போக்குவரத்து அமைச்சகமும் அனுமதி அளித்துள்ளது.

சாலையோரங்களில் வேம்பு, புங்கை, வாகை, நாவல் உள்ளிட்ட மரக்கன்றுகளை நட்டு பராமரிக்கப்படும்.

இந்த மரங்களின் பூக்களில் அதிக அளவில் தேன் இருப்பதை கருத்தில்கொண்டு, தேனீ வளர்ப்பு விவசாயிகளுக்கு உகந்த சூழ்நிலை ஏற்படுத்தித் தரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மரங்களிலிருந்து கிடைக்கும் விறகுகள் மூலம், அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கான வாழ்வாதாரம் மேம்படும்.

அதிக அளவு மரங்கள் பசுமை செழிப்பை உறுதி செய்து, மழைப்பொழிவுக்கு வழிவகுக்கும் என்றும் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<>>>>>>

புத்த பூர்ணிமாவையொட்டி, லடாக்கில் நடைபெறும் புத்த மத சின்னங்கள் கண்காட்சிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை கண்காணிக்க உயர்மட்ட ஒருங்கிணைப்புக் குழுவை லடாக் யூனியன் பிரதேச அரசு அறிவித்துள்ளது.

வரும் மே மாதத்தில் புத்த பூர்ணிமாவையொட்டி இந்த கண்காட்சி நடைபெறும்.

<<<<<>>>>>>

பங்களாதேஷின் புதிய பிரதமராக திரு தாரிக் ரஹ்மான் இன்று பதவியேற்றார்.

அந்நாட்டு அதிபர் திரு முகமது சகாபுதின் அவருக்கு பதவி பிரமாணமும், ரகசிய காப்புறுதியும் செய்துவைத்தார்.

திரு ரஹ்மானுடன், 25 கேபினட் அமைச்சர்களும், 24 இணையமைச்சர்களும் பதவியேற்றனர்.

அவர்களுக்கான துறைகள் விரைவில் ஒதுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா சார்பில், மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா, வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரியுடன் இந்த பதவியேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

முன்னதாக, இன்று காலை பங்களாதேஷ் தேசியவாத கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவராக திரு ரஹ்மான் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

புதுதில்லி சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **6-3, 7-5** என்ற செட் கணக்கில், ஸ்பெயினின் **David Sorda Sanchis** -ஐ வென்றார்.

----------------

பெங்களூரு மகளிர் டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீவள்ளி ராஷ்மிகா - மாயா ராஜேஷ்வரன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில், இந்த இணை, **6-1, 6- 3** என்ற செட் கணக்கில், **Harshini — Vanshita** இணையை வென்றது.

ஒற்றையர் பிரிவில் **Sahaja Yamalapalli,** வைஷ்ணவி **Adkar** ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<END>>>>>>**